# 3.1 தூய ஆவியாரின் வலுவூட்டல்



பழைய ஏற்பாட்டில் 'ஆவி' என்னும் சொல்லே வழக்கத்தில் இருந்த பழமையான சொல்லாகும். இச்சொல்லின் மூலம் கடவுளின் ஆற்றல் வெளிப்படுத்தப் படுகிறது. ஆவி என்னும் பெயரில் அழைக்கப்படும் 'ருவாக்' என்னும் எபிரேயச் சொல் 'காற்று' எனப் பொருள்படும். காற்றை நம்மால் உணர முடியும். ஆயினும் எங்கிருந்து வருகிறது எனவும் எங்கு போகிறது எனவும் கூற முடியாதென யோவான் நற்செய்தியில் காணப்படுகிறது. அவ்விதமே 'ஆவி' என்பது கடவுளின் செயல்பாட்டைக் குறிக்கின்றது. ஆயினும் கடவுளின் இருப்பு நிலையை, அவரது அசைவை நாம் காணமுடியாது.

பழைய ஏற்பாட்டில் செயல்பட்ட இறைவாக்கினரை 'கடவுளின் வாய்' என மக்கள் நம்பினர். இறைவாக்கினர் வெறுமனே எதிர்கால நடப்புக்களை முன்கூட்டியே அறிவிக்கின்றவர்கள் அல்லர். கடவுளின் ஆவியால் உந்துதல் பெற்று மக்களைக் கடவுள் வழியில் செயல்படத் தூண்டியவர்களே இறைவாக்கினர் ஆவர். எனவே இறைவாக்கினர்களின் செயல்பாடு, 'ஆவியின்' செயல்பாடு என்றால் மிகையாகாது.

புதிய ஏற்பாட்டில் சீடர்களின் அழைப்பு மற்றும் திருப்பணியை நோக்குகையில், அவை 'தூய ஆவியாரின்' செயல்பாடாகவே உள்ளது. புதிய ஏற்பாட்டுச் சிந்தனை வளர்ச்சியில், தூய ஆவியார் ஆள்தத்துவம் உள்ளவர் என்பது சிறப்பாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. ஆண்டவரின் சிறப்பு நோக்கமாகிய இறையாட்சி அனைவரையும் சமமாகக் கடவுளின் பிள்ளைகளாக ஏற்கும் நோக்கமுடையதாகும். எனவே புதிய ஏற்பாட்டில் தூய ஆவியாரின் செயல்பாடு சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.

ஆகவேதான் பெந்தக்கோஸ்து நாளில் எருசலேமில் யூதருக்கு வழங்கப்பட்ட ஆவியாரின் பேரருள், உரோமை இனத்தவராகிய கொர்னேலியு மற்றும் குடும்பத்தாருக்கும் (ஐரோப்பா), சமாரியருக்கும்(கலப்பு இனத்தார்), எத்தியோப்பிய (ஆபிரிக்கா) அன்னகன், என அனைவருக்கும் பாகுபாடின்றி



இலவச விநியோகத்திற்காக

வழங்கப்பட்டது. தூய ஆவியாரின் செயல்பாடு நம் நாட்டிற்கும் மிகவும் பொருந்தும் அல்லவா? தூய ஆவியாரின் செயல்பாட்டை இறையாட்சியின் வளர்ச்சியோடு இணைத்து காண்பதற்கு இப்புரிதல் பேருதவியாய் அமையும் அல்லவா?

## தூய ஆவியாரின் வருகை

**கலந்துரையாடல்.**

சாந்தி :- இன்று ஆலய வழிபாட்டில் போதகர் அருளுரையாற்றும் போது ''பெந்தக்கோஸ்து'' என்று கூறினாரே, எனக்கு ஒன்றுமே புரியவில்லையே வசந்தி.

வசந்தி :- ''பெந்தக்கோஸ்து'' என்றால் ஐம்பது என்று பொருள்படும். யூதர்கள் பாஸ்கா பண்டிகை கொண்டாடிய பின்பு வரும் ஐம்பதாவது நாளே பெந்தக்கோஸ்து எனப்படும். அன்றைய தினம் கோதுமை அறுவடையின் முதற்பலனை கடவுளுக்கு நன்றி செலுத்துவதற்காக எருசலேம் திருக்கோயிலுக்கு கொண்டு செல்வார்கள்.

சாந்தி :- சரிதான், இப்போது அது நமக்கு ஏன் முக்கியமெனக் கருதப்படுகிறது?

வசந்தி :- யூதரின் பெந்தக்கோஸ்து நாள் வந்தபோது சீடர்கள் எல்லோரும் ஓரிடத்தில் கூடியிருந்தார்கள். அவ்வேளையில் தூயாவியானவர் வல்லமையாக இறங்கினார். எனவே இந்நிகழ்வு மிகவும் முக்கியமானதாகும்.



ஆவியானவர் மக்கள் மத்தியில் வந்த போது

1 வானத்திலிருந்து கொடுங்காற்று வீசுவது போன்ற இரைச்சல் உண்டாயிற்று.

2 நெருப்பு போன்ற பிளவுற்ற நாவுகள் தோன்றின.

3 சீடர்கள் பல்வேறு மொழிகளில் பேசினர்.



இலவச விநியோகத்திற்காக





வாசிக்கவும்

திருத்தூதர் பணிகள்
அதிகாரம் 2

**நிறைவு செய்க.**

............................................ வரும் போது நீங்கள் ..............................
பெற்று ........................ முழுவதிலும் ............................................ வரைக்கும்
எனக்குச்.......................... (தி.ப 1:8)

## நாம் தூய ஆவியாரை வாழ்வின் வழிகாட்டியாக ஏற்றுக் கொள்ள முன்வருவோம்.

இயேசு கிறிஸ்து கைதாகி இருந்தபோது, வீட்டின் உள்முற்றத்தில் அமர்ந்திருந்த பேதுருவை நோக்கிப் பணிப்பெண் ஒருவர் ''நீயும் இயேசுவோடு இருந்தவன் தானே'' என்று கேட்டபோது, அவர் அனைவர் முன்னிலையிலும் '' இம்மனிதனை எனக்குத் தெரியாது '' என்று பயத்தினால் மறுதலித்ததைப் போன்று, நாமும் கிறிஸ்து இயேசுவை மறுதலிக்காமல், அவரை ஏற்றுக்கொள்ள முன்வருதல் வேண்டும். இவ்விதம் வாழ்வதற்குத் தேவையான மனவுறுதியை தூய ஆவியானவர் நமக்கு வழங்குவார்.

## மனம் திரும்புதலுக்கு தூய ஆவியார் துணை புரிகிறார்.

''நான் உனது நம்பிக்கை தளராதிருக்க உனக்காக மன்றாடினேன். நீ மனந் திரும்பிய பின் உன் சகோதரர்களை உறுதிப்படுத்து'' என்று இயேசு பேதுருவிடம் கூறினார்.

பேதுரு, இயேசு கிறிஸ்துவை மறுதலித்தார் எனினும் அதற்காக மனம் வருந்தினார் அல்லவா? நாமும் நமது பாவச் செயல்களுக்காக மனம் வருந்தி தூய ஆவியாரின் வழிநடத்துதலைப் பெறுவோம்.



இலவச விநியோகத்திற்காக

தூய ஆவியாரின் வலுவூட்டலைப் பெற்றுக் கொண்ட பின் மக்களிடையே காணப்பட்ட மாற்றங்கள் (திருத்தூதர் பணிகள் 2:44-47).

நம்பிக்கை கொண்டோர் (விசுவாசிகள்)
- ஒன்றாயிருத்தல்
- உடமைகளைப் பொதுவாக வைத்திருத்தல்
- உணவைப் பகிர்ந்துண்ணல்
- கடவுளைப் போற்றுதல்

யோவான் அதிகாரம் 20 இல், *உயிர்த்த ஆண்டவர் தமது சீடர்களைச் சந்தித்தார். அச்சத்தில் நிறைந்திருந்த சீடர்களை நோக்கி 'உங்களுக்கு அமைதி உரித்தாகுக'.* என்றார். அதன் பின்பு அவர்கள்மேல் ஊதி, தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்' என்றார். தூய ஆவியை வழங்கிய பின்பு அவர்களிடம் மன்னிப்பின் பணியை ஒப்படைத்தார்.

## சிந்தியுங்கள்

1 கீழே தரப்பட்டுள்ள தலைப்பைக்கொண்டு குழுக்களாக கலந்துரையாடுங்கள்.

'இன்றைய சூழலில் நமது மக்கள் தூய ஆவியாரின் துணையுடன் வாழ்தல் வேண்டும்'.

## நிரல்படுத்துக

பேதுருவின் அருளுரையை வாசித்து, அதிலிருந்து ஓரிரு பழைய ஏற்பாட்டு பகுதிகளை மேற்கோள் காட்டவும்.

**எடுத்துக் காட்டு**



"நான் மாந்தர் யாவர் மேலும் என் ஆவியைப் பொழிந்தருள்வேன்".
(யோவேல் 2:28)

தூய ஆவியாரின் வல்லமையைப் பெற்ற பின் சீடர்களில் காணப்பட்ட சிறப்புத் தன்மைகள்.

1. துணிவு
2. வல்லமை
3. நம்பிக்கை

இவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர்களின் வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்பட்டன. அவர்களின் வாழ்வுமுறை நம்மையும் உண்மை சார்பாக ஒப்படைக்கத் தூண்டுகிறது அல்லவா?

**இப்போது உங்களுக்கு என்ன தோன்றுகிறது?**

நாம் எல்லோரும் தூய ஆவியாரின் வல்லைமையைப் பெற முடியும். நாமும் கீழ்ப்படிவுடன் கிறிஸ்து இயேசுவுக்குள் வாழ்ந்தால் தூய ஆவியானவரின் வல்லமையைப் பெற்றுக்கொள்ள முடியும். நாம் தூய ஆவியாரின் வல்லமை மற்றும் ஈவுகளைப் பெற்றுக்கொள்வதற்காகச் செபிப்போம்.

**செயல்பாடு**

1. *திருத்தூதர் பணிகள் 2ம் அதிகாரத்தை வாசித்து பேதுருவின் அருளுரையின் முக்கிய அம்சங்களைக் குறிப்பிடுக.*
2. *பெந்தக்கோஸ்து நாளில் நடந்த நிகழ்வுகளை விளக்குக.*



இலவச விநியோகத்திற்காக